# சுமங்கலிப் பிராத்தனை.

**சுமங்கலிப் பிராத்தனை என்பது என்ன?** திருமணமாகி (கணவருக்கு முன்பாக) சுமங்கலியாக இறந்து போன பெண்களை உத்தேசித்து அந்தக் குடும்பத்தினரால் (பெண்களால் பெண்களைக் கொண்டு) நடத்தப்பதுடும் நிகழ்ச்சி சுமங்கலிப் பிராத்தனையாகும்.

சுமங்கலிப் பிராத்தனை வைதீக காரியமாக இல்லாவிட்டாலும், மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும். கிட்டதட்ட இதை ஒரு பித்ரு காரியம் என்றே சொல்லலாம். மிகவும் பய பக்தியுடனும், சிரத்தையுடனும் பெண்கள் இதை அனுசரிக்க வேண்டும். **இங்கு விவரிக்கப்பட்டவை பொதுவானவை. ஒவ்வொரு க்ருஹத்திலும் சில மாற்றங்கள் இருக்கும். எனவே அவற்றை ஆத்து பெரியோர்களை கேட்டு மட்டுமே செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு அவஸ்த்தை வேறுபட்டிருக்கும். இது முக்கியமானது.**

**சுமங்கலிப் பிராத்தனையை எப்போது செய்ய வேண்டும்?** ஒவ்வொரு வருஷமும், தவறாது சிரார்த்தம் செய்வது போல, சுமங்கலிப் பிராத்தனையை ஒவ்வொரு வருஷமும் தவறாது செய்ய வேண்டும். ஆனால், ஒரே வருஷத்தில் இரண்டு சுமங்கலிப் பிராத்தனை செய்யக்கூடாது.

**சுமங்கலிப் பிராத்தனைக்கு விதிமுறைகள் உண்டா?** இறந்த சுமங்கலிகளை திருப்திபடுத்தச் செய்யும் இந்நிகழ்ச்சிக்கு சிரார்த்தம் போல, பற்பல விதிமுறைகள் உள்ளன.

**சுமங்கலிப் பிராத்தனையை முறையாக செய்வது எப்படி?** ஒவ்வொரு குடும்பத்தினரும், அவரவர் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, அவர்கள் வசிக்கும் வீட்டிலேயே செய்ய வேண்டும்.

**சுமங்கலிப் பிராத்னையை ஒருவருக்காக வேறு ஒருவர் செய்யலாமா?** எவ்வாறு ஒருவருக்காக இரத்த சம்பந்தமில்லாத யாரோ ஒருவர் செய்யக் கூடாதோ, அதே போல் சுமங்கலிப் பிராத்தனையையும் ஒருவருக்காக இன்னொருவர் செய்யக்கூடாது.

**சுமங்கலிப் பிரத்தனையில் யார் யார் கலந்து கொள்ளலாம்?** சுமங்கலிப் பிராத்தனையைச் செய்யும் குடும்பத்தாரின் நெருங்கிய உற்வினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். (பங்காளிகள்)

**சுமங்கலிப் பிராத்தனையில் யார், யார் கலந்து கொள்ளக்கூடாது?** சுமங்கலிப் பிராத்தனை செய்பவரின் குடும்பத்தைச் சேராதவர்கள் (அதாவது பங்காளியாக இல்லாதவர்கள்), கலந்துக் கொள்ளக்கூடாது. உறவினர்கள் இறந்த பத்து நாட்கள் தீட்டு காத்த பெண்கள், ஆறு மாதம் வரை, சுமங்கலிப் பிராத்தனையில் கலந்துக் கொள்ளக்கூடாது.

**சுமங்கலிப் பிராத்தனையில் கலந்து கொள்பவர்களில் யார் யாருக்கு பலன் கிடைக்கும்?** எந்த குடும்பத்தினரின் பணத்தாலும், உடல் உழைப்பாலும் சுமங்கலிப் பிராத்தனை நடத்தப்படுகிறதோ, அந்த குடும்பத்தினருக்கும், அவர்களுடைய இரத்த சம்பந்தம் உள்ள நெருங்கின உறவினர்களுக்கு மட்டுமே அதன் பலன் கிடைக்கும்.

**சுமங்கலிப் பிராத்தனையில் கலந்து கொள்பவர்களில் யார் யாருக்கு பலன் கிடைக்காது?** சுமங்கலிப் பிராத்தனை செய்பவரின் குடும்பத்துக்கு இரத்த சம்பந்தமில்லாத மற்றவர்கள் உடலுழைப்பு, பண உதவி போன்றவற்றைச் செய்து கலந்து கொண்டாலும் பலன் கிடைகாது. சுமங்கலிப் பிராத்தனையில் கலந்து கொண்டோம் என்ற திருப்திதான் கிடைக்கும்.

**சுமங்கலிப் பிராத்தனையை எப்படிச் செய்தால் பலன் கிடைக்கும்?** ஒவ்வொரு குடும்பத்தினரும் தனிதனியாக, அவர்களுடைய் நெருங்கிய உறவினர்களுடன் சுமங்கலிப் பிராத்தனை செய்யும் போது மட்டுமே, சுமங்கலிப் பிராத்தனை செய்தவர் மற்றும் கலந்து கொள்பவர்கள் குடும்பத்தினருக்கு பலன் கிடைக்கும்.

**சுமங்கலிப் பிராத்தனை செய்ய எப்போது நாள் பார்க்க வேண்டும்?** விவாஹம், உபநயனம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு அங்கமாகவோ அல்லது தியாகவோ சுமங்கலிப் பிராத்தனை செய்யும்போது, தகுந்த நாள் பார்த்து செய்ய வேண்டும்.

**சுமங்கலிப் பிராத்தனை செய்ய விலக்க வேண்டிய் நாட்கள் எவை?** அஷ்டமி, நவமி, ஏகாதசி, அமாவாசை ஆகிய திதிகளையும் பரணி, கிருத்திகை ஆகிய நட்சத்திரங்களையம், கிழமைகைளில் சனிக்கிழமையையும் தவிர்க்க வேண்டும்.

**சுமங்கலிப் பிராத்தனைச் செய்ய எப்போது நாள் பார்க்க வேண்டியதில்லை?** சுமங்கலியாக இறந்து போன பெண்களுக்கு சிரார்த்தம் செய்த மறுநாள் சுமங்கலிப் பிராத்தனை செய்வது என்று ஒரு வழக்கம் உள்ளது. இதற்கு தனியாக நாள் பார்க்கத் தேவைவில்லை.

**வீட்டைச் சுத்தம் செய்வது எப்போது?** சுமங்கலிப் பிராத்தனை செய்யும் நாளன்று அதிகாலை 5 மணி அளவில் வீட்டை அலம்பி சுத்தம் செய்ய வேண்டும். முதல்நாள் செய்து வைத்துக் கொள்வது உசிதம் இல்லை.

**சுமங்கலிப் பிராத்தனை புடவையை எப்படி காய வைக்க வேண்டும்?** புடவையை நனைத்து, பிழிந்து, புடவைத் த்லைப்பு கிழக்கு மேற்கு திசையில் உள்ளவாறு உலர்த்த வேண்டும். ஒருபொழுதும், புடவைத் தலைப்பு தெற்கே இருக்குமாறு உலர்த்தக்கூடாது.புடவையில் கறுப்பு நிறம் கலந்து இருக்கக்கூடாது.

**புடவையை எப்படி எடுத்து வர வேண்டும்?** புடவையை கசக்காமல் அப்படியே எடுத்து வர வேண்டும்.

**புடவையை எவ்வாறு வைக்க வேண்டும்?** புடவையை நன்ராக கொசுவி, மாக்கோலம் போட்ட பலகையினை சுவற்றில் சாத்தி, அதன் மேல் அம்மன் போல் வைக்க வேண்டும். புடவைக்கு மாலை போட்டு, கீழே பாதத்தில் ரவிக்கையை மடித்து வைக்க வேண்டும். புடவை தரையில் படமாலிருக்க கீழே இனனொரு மாக்கோலம் போட்ட பலகையை வைக்க வேண்டும்.

**குத்து விளக்கு எப்போது எப்படி ஏற்ற வேண்டும்?** காலையி ஒரு குத்து விளக்கு, ஒரு முகத்துடன் ஏற்ற வேண்டும். மதியம் இரண்டு குது விளக்குகள், ஐந்து முகத்துடன் ஏற்ற வேண்டும்.

**எண்ணெய் ஸ்நானம் எப்படிச் செய்ய வேண்டும்?** சுமங்கலிப் பெணகளை வீட்டுக்கு கூப்பிட்டு, வரவேற்று அவர்களை எண்ணெய் ஸ்நானம் செய்யச் சொல்லி, எண்ணெய் கொடுக்க வேண்டும். ஸ்நானம் ஆனவுடன், புடவை, மஞ்சள், குங்குமம் போள்ற சௌபாக்கிய பொருட்களைக் கொடுக்க வேண்டும்.

**எத்தனை பெண்களை சுமங்கலியாக வரிக்க வேண்டும்?** பெண்கள் 5 அல்லது 7 அல்லது 9 பேரை (ஸுவாமி இலை உட்பட) வைத்து பூஜை செய்ய வேண்டும். 3 பெண்கள் கூடாது. 11 பெண்களுக்கு மேல் கூடாது. 7 வைத்தால், 1 சுவாமி இலை, 1 கன்யா பெண் இலை.

**சுமங்கலிப் பெண்கள் கால்களை அலம்ப ஏதேனும் விதிமுறைகள் உள்ளதா?** சுமங்கலிப் பெண்களின் கால்களை அலம்பும் போது, ஜலம் விடும்போது, நேரடியாகக் காலில் விட வேண்டும். காலில் சந்தனம் தடவலாம். குங்குமம் தடவக்கூடாது.

**சுமங்கலிப் பெண்களுக்கு கால் எப்போது அலம்பி விட வேண்டும்?** சமையல் தயாரானதும், சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் கொடுத்து அவர்கள் கால்களை அலம்பி விட வேண்டும்.கழுத்திற்கு சந்தனம் பூசி, புஷ்பம், குங்குமம் கொடுக்க வேண்டும்.

**சாப்பிட எப்படி இலை போட வேண்டும்?** நுனி கிழியாத வாழை இலையைத்தான் உபயோகிக்க வேண்டும். மாக்கோலம் போட்டு, அதன் மேல் வாழை இலையின் நுனி வடக்கு பக்கம் இருக்குமாறு போட வேண்டும். இட நெருக்கடி என்று சொல்லி இலையை மாற்றிப் போடக்கூடாது.

**இலையில் எப்படி பரிமாற வேண்டும்?** அபிகாரம் செய்து பரிமாற வேண்டும். சுமங்கலியாக இறந்தவர்களின் பெயர்களைக் கூறி நிவேதனம் செய்ய வேண்டும். சமைத்த பண்டங்கள் சூடாக இருக்க வேண்டும். அதற்காக மீண்டும் சூடு பண்ணக்கூடாது.

பூஜை செய்யும் முன் பெண்களை அழைத்து, இறந்த சுமங்கலிப் பெண்களின் பெயர்களைச் சொல்லி, தெரிந்த, தெரியாத, அறிந்த, அறியாத எல்லோரையும் நினைத்துக் கொள்ள வேண்டும்.

**வேறு எந்தவிதமான சாமாங்களை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்?** ஒரு தாம்பாளத்தில் ஒரு சீப்பு வாழைப்பழம், வெற்றிலை, தேங்காய், பாக்கு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். சுக்கு, வெல்லப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.நெய் சேர்க்கக்கூடாது.நீர் மோர், பானகம் கரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**சுமங்கலி பூஜையை எப்படிச் செய்ய வேண்டும்?** முதலில் தேங்காயை உடைத்து, சாம்பிராணி போட வேண்டும். இலையில் அன்னம், காய், போன்ற சாப்பிட சமைத்த பதார்த்தங்களைப் பறிமாற வேண்டும்.பிறகு எலலாப் பெண்களையும் கூப்பிட்டு, எல்லா இலைகளுக்கும் நைவேத்தியம் செய்ய வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் உதிரிபுஷ்பம், அக்ஷதையை புடவைக்கு போட்டு நமஸ்காரம் செய்ய வேண்டும்.

**சுமங்கலிப் பெண்டுகளை உபசரிக்கும் முறை என்ன?** சுமங்கலிப் பெண்களை இலையில் உட்கார வைத்து, இரண்டு முறை ஆபோஜனம் போட வேண்டும். பெண்கள் எல்லோரையும் நள்கு சாப்பிட உபசரிக்க வேண்டும். இலையில் ஆப்பிள், ஆரஞ்சு, கொய்யா, திராட்சை, ப;லா சுளை போன்ற பழங்களை பரிமாறலாம். பெண்கள் சாப்பிட்ட பின்பு

காலில் நலங்கு இட வேண்டும். பிறகு குங்குமத்துடன் கூடிய குங்குமச்சிமிழ், சீப்பு, கண்ணாடி, ரவிக்கைத்துண்டு, வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், புஷ்பம் முதலியவற்றை பெண்களுக்கு கொடுக்க வேண்டும்

**ஆரத்தி யார் எடுக்க வேண்டும்?** ஆரத்தியை ஆத்து நாட்டுப் பெண் எடுக்க வேண்டும் அல்லது சுமங்கலிப் பிராத்தனை செய்த குடும்பத்தில் உள்ள வயதில் பெரியோர்களாக உள்ளவர்கள் எடுக்க வேண்டும்.

**வீட்டில் உள்ளவர்கள் எப்போது சாப்பிட வேண்டும்?** மேற்கூறிய எல்லா உபசாரங்களையும் சுமங்கலிப் பெண்களுக்கு செய்த பிறகு, வீட்டில் உள்ள அனைவரும் சுவாமிக்கு அட்சதைப் போட்டு நமஸ்காரம் செய்து விட்டு சாப்பிட வேண்டும். சுமங்கலி பிராத்தனை நிகழ்ச்சியில் ஆத்து மாட்டுப் பெண்ணும், மாமியாரும் சேர்ந்து ஒரே பந்தியில் சாப்பிடக்கூடாது.

**சுமங்கலிப் பிராத்தனையில் கலந்து கொண்டு பெண்டுகளாக இருந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேறு ஏதேனும் நியமனம் உண்டா?** பெண்டுகளாக இருந்தவர்கள் மற்றும் ஆத்து பெண்கள் அனைவரும் அன்று இரவு சாப்பிடக்கூடாது. பால், பழம், பக்ஷணம் மட்டில் சாப்பிடலாம். சுமங்கலிப் பெண்கள் சுமங்கலிப் பிராத்தனை செய்த வீட்டிலேயே அன்று இரவு தங்க வேண்டும். மறுனாள்தான் வெலியே செல்ல வேண்டும்.

**சமையல்:-** சுமங்கலிப் பிராத்தனை சமையலில் வெங்காயம், பூண்டு, பீட்ருட் போன்ற காய்க்றிகளைச் சேர்க்கக்கூடாது. சிராத்த சமையலுக்கு என்ன பொருட்களைச் சேர்க்கிறமோ, அதை மட்டும்தான் சேர்க்க வேண்டும்.